# முதன்மை மாவட்ட நீதிமன்றம், விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்

## O.S.No.172/2019

## சாட்சியின் சான்றுரை PW-1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | - | மணிகண்டன் | வட்டம் | - | |
| த/பெ | - | கோபு | சாதி | - | |
| வயது | - | | மதம் | - | |
| கிராமம் | - | | தொழில் | - | |

05.08.2023 இன்று 1969ஆம் ஆண்டு சட்டம் 10-ன் படி என்னால் உறுதிமொழி கொடுத்து சாட்சியமளிக்கப்பட்டது.
வாதி சாட்சி 1 வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் தற்போது லாரி நிறுவனம் வைத்து நடத்திகொண்டிருக்கிறேன். நான் எப்போத பிறந்தேன் என்றால் 1977ல் பிறந்தேன். என் தகப்பனார் பெயர் கோபு என்றால் சரிதான். என் தகப்பனாருக்கு 4 குழந்தைகள். என் அக்கா சசிகலா, நான், ராஜேஸ்வரி மற்றும் கோதைநாயகி என் தங்கைகள் ஆக மொத்தம் 4 குழந்தைகள். 1ம் வாதி ஜெயலட்சுமி என் தாயார் என்றால் சரிதான். என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் மில்லை நடத்த வேண்டும் என்றும் அதன் சம்மந்தமாக கடனை அடைக்கவேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எத்தனை அயிட்ட சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 2 அயிட்ட சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அதில் ரைஸ்மில் மற்றும் வீடு ஆகும். மேலும் நிலத்திறக்காகவும் தாக்கல் செய்துள்ளேன். நிலம் விக்கிரவாண்டியில் உள்ளது. ரைஸ்மில்லின் சர்வே எண்.464 ஆகும். அதனுடைய விஸ்தீரனம் 1 ஏக்கர் 19 சென்ட் ஆகும். அதில் ரைஸ்மில் உள்ளது என்றால் சரிதான். ரைஸ்மில்லீன் இணைப்பு எண்.1251 ஆகும். மற்றொரு அயிட்ட சொத்தின் சர்வே எண் ஞாபகம் இல்லை. நிலத்தின் சர்வே எண் ஞாபகம் இல்லை. அதில் வங்கியில் கடனில் உள்ளது. மில்லும் வங்கி கடனில்

உள்ளது. ரைஸ்மில் அயிட்ட சொத்திற்கு சக்குபந்தி தெரியுமா என்றால் தெரியாது. வீடு உள்ள இடத்திற்கு சக்குபந்தி தெரியுமா என்றால் தெரியாது. விக்கிரவாண்டியில் உள்ள நிலத்திற்கு சக்குபந்தி தெரியுமா என்றால் தெரியாது. நான் வழக்கில் காட்டப்பட்டுள்ள சொத்துக்கள் அனைத்தும் எனது தந்தையாரால் கிரையம் பெறப்பட்ட சொத்து என்றால் சரிதான். அவர் தனிப்பட்ட வருவாயை கொண்டு ரைஸ்மில் கட்டப்பட்டது என்றால் சரியல்ல. எனது தாத்தா காலத்திலிருந்தே ரைஸ்மில் உள்ளது. எனது தந்தையார் கால்நடை மருத்துவராக இருந்தார். அதற்கு பிறகு அந்த வேலையை விட்டு விட்டு ரைஸ்மில்லை 1986ல் தனது வேலையை ராஜினாமா செய்துவிட்டு ரைஸ்மில்லை பார்த்துகொண்டார். என் தாத்தா பெயர் துரைசாமி ஆகும். எனது தாத்தா பெயரில் ரைஸ்மில்லை நடத்தியதற்கு அனுமதி சீட்டை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அது என் அப்பாவின் அண்ணன் தம்பி பெயரில் கூட்டாக இருந்தது. நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ1 முதல் 3 என் தந்தையார் பெயரில் உள்ளது என்றால் சரிதான். என் தாத்தா காலத்திலிருந்தே ரைஸ்மில் ஆரம்பிக்கப்பட்டு அவரால் நடத்தப்பட்டது என்று வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு என் தந்தையார் இருக்கும் போதே திருமணம் நடந்தது என்றால் சரிதான். நான் 1ம் பிரதிவாதி திருமணத்தின் போது நான் சிறுவயதாக இருந்ததால் அவருக்கு என்ன சீர்வரிசை செய்யப்பட்டது என்பது தெரியாது என்றால் இல்லை எனக்கு தெரியும். அவருக்கு திருமணம் 1994ல் செய்யப்பட்டது. எங்கு நடந்தது என்றால் சென்னையில் நடந்தது. எனக்கு சொந்த ஊர் விக்கிரவாண்டி ஆகும். திருமணம் சென்னையில் நடந்ததால் மணமகன் வீட்டில் நடத்தினார்கள் என்றால் சரியல்ல. நாங்கள் தான் நடத்தினோம். அவர்கள் அங்கு குடியிருந்ததால் அங்கு திருமணம் நடந்தது. சசிகலாவிற்கு ராமராஜன் திருமணம் மண்டபத்தில் நடைபெற்றது. அது எந்த ஏரியாவில் உள்ளது என்றால் ராயப்பேட்டையில் உள்ளது. 3,4 வாதிகளுக்கு

சென்னையில் திருமணம் நடந்தது. அவர்களுக்கும் என் தகப்பனார் இருந்தபோதே திருமணம் செய்யப்பட்டது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு திருணத்தின் போது என்ன சீர்வரிசை செய்யப்பட்டது என்றால் 80லிருந்து 100 பவுன் நகை கொடுக்கப்பட்டது திருமண செலவும் நாங்கள் தான் செய்தோம். 100 பவுன் நகை எங்கு வாங்கப்பட்டது என்றால் என் தந்தையார் மாப்பிள்ளை வீட்டிலேயே பொறுப்பை ஒப்படைத்து அவர்களை வாங்கிகொள்ள சொல்ல பணம் கொடுத்துவிட்டார். எவ்வளவு தொகை கொடுக்கப்பட்டது என்றால் ரூ.30 லட்சம் கொடுக்கப்பட்டது. 1994ல் எங்களுக்கு வசதி இல்லை என்றும் எவ்வித சீர்வரிசையும் செய்யாமலும் தான் திருமணம் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அதற்கான வீடியோ பதிவு உள்ளது. அதில் அனைவரும் உள்ளோம். அவர்களுக்கு கொடுத்த சீர்வரிசையும் உள்ளது. 1ம் பிரதிவாதிக்கு திருமணம் எங்கள் செலவில் செய்தோம் என்று வழக்கிற்காக பொய் சொல்கிறோம் என்றால் சரியல்ல. என் தந்தையாரால் செய்யப்பட்டது. நாங்கள் செலவு செய்து திருமணம் செய்திருந்தால் விக்கிரவாண்டியில் தான் செய்திருப்போம் என்றும் அவர்கள் வீட்டில் செலவு செய்ததால் த ான் சென்னையில் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அவர்கள் வீட்டில் சொந்தம் அதிகம் அதனால் அவர்கள் விருப்பத்திற்கிணங்க சென்னையில் செய்யப்பட்டது. என் தகப்பனார் ரைஸ்மில்லை எப்போது ஆரம்பித்தார் என்றால் 1986ல் முன்பணம் கொடுத்து 1990ல் என் தாத்தாவிடமிருந்து வாங்கினார். அதற்கு பத்திரம் உள்ளதா என்றால் உள்ளது. அந்த ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அது நகல் என்பதால் தாக்கல் செய்யமுடியாது என்று சொல்லிவிட்டார்கள். அது என் வழக்கறிஞரிடம் உள்ளது. 1990ல் எனக்கு என்ன வயது என்றால் 15 வயது இருக்கும். அப்போதுநான் பள்ளியில் படித்து வந்தேன் என்றால் சரிதான். என் தகப்பனாரின் சுய உழைப்பில் தான் ரைஸ் மில் நடத்தப்பட்டது என்றால் சரியல்ல. 1994ல் நான் படித்து முடித்துவிட்டு என்

தந்தையாருக்கு உதவியாக எல்லா இடங்களுக்கும் சென்று ரைஸ்மில்லை முன்னுக்கு கொண்டுவந்தேன். நான் மேல்நிலை பள்ளி படித்து இருக்கிறேன். என் தகப்பனார் ரைஸ்மில் வளர்ச்சிக்காக மத்திய வங்கியிலிருந்து ரூ.44 லட்சம் கடன் வாங்கியிருந்தார் என்றால் சரிதான். அந்த கடனை திரும்ப செலுத்திவிட்டேனா என்றால் அது அரசாங்கத்தில் தள்ளுபடி செய்யப்பட்டது. வழக்கு சென்னையில் நிலுவையில் உள்ளது. அதன் தொகைகளை செலுத்திவிட்டோம். ரூ.1,58,000/- மற்றும் வட்டியுடன் கட்டவேண்டும் அதற்கு நாங்கள் வேய்வர் கேட்டுள்ளோம். கடன் தொகையை எப்போது எவ்வளவு செலுத்தப்பட்டது என்றால் வங்கியில் அதை பற்றிய விவரத்தை வாங்கிகொள்ள இயலும். அதை கொடுத்துள்ளேன். அது நகல் என்று சொல்லிவிட்டார்கள். எனது பிரமாண வாக்குமூலத்தில் பணத்தை செலுத்திவிட்டேன் என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அந்த கடனை அரசு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் பண்ணை கடன் என்று தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. அதற்காக நாங்கள் வேய்வர் கேட்டுள்ளோம். இது குறித்து நாங்கள் டிஆர்டியில் வழக்கு தாக்கல் செய்துள்ளோம். அந்த வழக்கு எண். தெரியுமா என்றால் அப்பா இருக்கும் போது அந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. அதன் பின் அப்பா அங்கு போய் பார்த்துள்ளார். அதனால் எனக்கு வழக்கு விவரங்களை வழக்கறிஞர் தரவில்லை. என் தகப்பனார் இருந்த போதே ரூ.20 லட்சம் கடன் பெற்று ரைஸ் மில்லை நடத்தினார் என்றால் சரிதான். அது தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கியல்

வாங்கப்பட்டது. அந்த கடனை என் தகப்பனார் அடைத்துவிட்டாரா என்றால் இல்லை. இது வரை நான் தான் அதற்கு வட்டி கட்டிவருகிறேன். அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா எ்னறால் ஆவணம் உள்ளது அது நகலாக உள்ளது. தற்போது அந்த கடன் என் பெயரில் மாற்றப்பட்டுள்ளது. நான் வட்டி கட்டி வருகிறேன்.

குறுக்குவிசாரணையின் தொடர்ச்சி அனுமதியின் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது.

Sd/- R.Poornima,
Principal Sessions Judge,
Villupuram.